மலர் : 20
இதழ் : 13

அடித்தளம்

அன்பியங்களின் தொடர்பிதழ்

குழித்துறை மறைமாவட்டம்

ஜனவரி 2025

தனிச்சுற்றுக்கு மட்டும்

புத்தாண்டில் புதுவாழ்வு

இயக்குநரிடமிருந்து......

மாற்றமும் புதுமையும் நிறைந்த ஜூபிலி

மகிழ்ச்சி, செழிப்பு, அமைதி என அனைத்து சிறப்புகளையும் கொண்டது புத்தாண்டு. சாதி, மத, இனம், மொழி கடந்து கொண்டாடப்படும் விழாக்களில் புத்தாண்டும் ஒன்று. புத்தாண்டு என்றாலே புதுமையின் அடையாளம். புது ஆண்டைக் கொண்டாடும் வகையில் வெளித்தோற்றங்களில் மாற்றமடைந்து சிறப்பித்தால் புத்தாண்டுக் கொண்டாட்டம் அர்த்தமற்று போகும். அன்பையும், பண்பையும், பகிர்தலையும் அடித்தளமாக்கி பிறரன்பில் ஆர்வம் கொண்டு, சுயநலமற்ற வாழ்வு வாழ்ந்து அகத்தோற்றத்தால் மாற்றம் பெறுவோம். அதுவே உண்மையான புத்தாண்டுக் கொண்டாட்டமாக அமையும். மாற்றமிருந்தால் தான் புதுமை பிறக்கும்.

கடலில் தோன்றும் அலையானது ஓய்வின்றி ஒன்றின் பின் ஒன்றாக கரையை நோக்கி நகர்ந்து கொண்டே இருக்கும். அதுபோல வாழ்க்கைப் பயணத்தில் ஒவ்வோராண்டும் நம்மைவிட்டு கடந்து செல்லச் செல்ல புதிய ஆண்டில் தடம் பதித்துக் கொண்டிருக்க வேண்டும். அதுவே புதுமையை ஏற்றுக்கொண்டதன் அடையாளம் ஆகும். கடந்த காலத்தில் வாழ்விலிருந்து நீக்கப்பட வேண்டியவற்றை நீக்கி புதிதாக சேர்க்கப்பட வேண்டியவற்றை சேர்த்துக் கொண்டால் புதுமையை அடையலாம்.

ஏழ்மையை உணர்ந்து, ஏழ்மையின் பிறப்பிடமான கிறிஸ்துவின் பிறப்பால் மீட்படைந்த பின்னும் வெளிப்படையானக் கொண்டாட்டங்களை மட்டும் ஏற்றெடுப்பதில் எந்த பயனுமில்லை. இருளைப் பழிப்பதை விட ஒளியை ஏற்றுவதே மேல். கடந்த ஆண்டின் சாதனைகள், சவால்கள், எதிர்நோக்குகள் ஆகியவற்றைக் கண்ணோக்கிப் பார்ப்போம். சோதனைகளில் துவண்டுவிடாமல் சவால்களை எதிர்கொள்ளும் புதியப் பார்வையோடு பயணிக்க பழகிக் கொள்வோம். புதிதாய் உருமாற்றம் பெற உடல் உள வலிமை மிக அவசியமான ஒன்று. நாகரீகம் என்ற பெயரில் செயற்கை உணவுகளை உட்கொண்டு வாழ்நாளை குறைப்பதைவிட இயற்கை நமக்கு ஈந்த இயற்கை உணவுப்பொருட்களை உண்டு உடலையும் உள்ளத்தையும் சீர்படுத்த முயற்சிகள் செய்வது இப்புதிய புத்தாண்டில் நாம் செய்யும் சாதனையாக அமையும்.

நாம் வாழும் சமூகம் ஆரோக்கியமான சமூகமாக மாற அன்பியமாக இணைந்து முயற்சிகள் செய்வோம். இயற்கையை பராமரித்துப் பேணிக்காக்க வழிவகைச் செய்வோம். மாற்றத்திற்காக இணைந்து செய்யும் முயற்சிகளால், வாழ்க்கை நிறைவான மகிழ்ச்சியில் பொங்கட்டும். உயிர்களை வளப்படுத்தும் இயற்கையைப் பேணிகாப்போம். இதனால் அன்றாட தேவைகளை நிவர்த்திசெய்ய துணைநிற்கும் உழவுத்தொழில் செழித்தோங்கும். உழவுத்தொழிலை மதித்து இயற்கை உணவுகளை உட்கொண்டு ஆரோக்கியமான உடல்நிலையை உருவாக்க முயற்சிகள் எடுப்போம்.

ஊடகப் பொழுதுபோக்குகளில் நேரத்தை வீணாக்காமல், நம்மைச்சார்ந்த உறவுகளுக்காக நேரத்தைச் செலவிடுவோம். ஒன்றிணைந்து பயணிக்கும் குடும்பங்களாக, அன்பியங்களாக, திருஅவையாக மாற்றம் பெறுவோம். வார்த்தைகளால் மட்டும் பயணிக்காமல் வார்த்தைகளை வாழ்வாக்கி, புது சிந்தனையோடு சிறப்புமிக்க ஆண்டாக அமைக்க வழிகாண்போம். மாற்றத்தின் வழியாய் அனைவரையும் ஒன்றிணைக்கும் வழிகாட்டியாக இந்த ஜூபிலி ஆண்டு அமைய மனமார வாழ்த்துகிறேன்.

பணி தோழமையில்

அருட்பணி **M. ஆல்வின் விஜய்**
இயக்குநர், அன்பிய பணிக்குழு

1

வாரம்

புத்தாண்டில் புது மனிதனாய்

திருமதி. A. சின்னராணி
புனித ஜார்ஜியார் ஆலயம், பிலாவிளை

2025

மண்ணில் புத்தாண்டு பிறந்துள்ளது

புதிய கண்ணோட்டம் மலர்ந்துள்ளது

புது நம்பிக்கை சுடர் ஒளி வீசுகிறது

முதியோர் அன்பாய் அரவணைப்பில் மகிழ

குடும்பங்கள் ஒற்றுமையாய் குழந்தைகளுடன் வாழ, அனாதைகளும் கைவிடப்பட்டோரும் நல் உள்ளங்களாய் இணைய, இளையோர் நவீனமாய் நற்செயல்கள் ஆற்ற, அனைவருக்கும் புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்.

விளை நிலங்களும், இயற்கையும் செழித்திட சமுதாய சீர்கேடும் இன்னல்களும் ஒழிந்திட, சாதி மத பேதமின்றியாவும் தழைத்திட, உணவு உடை உறைவிடம் நிறைவேறிட, எல்லாரும் எல்லாமாய் ஒன்றாய் வாழ்ந்திட புத்தாண்டே வருக ! புது மனிதனாய் மாறிட.

புத்தாண்டில் இறையாசீர்

புத்தாண்டின் முதல் நாளில் முதல் மணித்துளியில் ஆலயத்தில் கூடியிருக்கும் நமக்கு கடவுளின் வார்த்தை நம்பிக்கையை தருகின்றது. ஆண்டவரே உனக்கு ஆசி வழங்கி உன்னைக் காப்பாராக. ஆண்டவர் தம் திருமுகத்தை உன் பக்கம் திருப்பி உனக்கு அமைதி அருள்வாராக ! என்று அறிக்கை விட்டு கடவுள் தம் ஆசீர்வாதத்தையும் அருள் வரங்களையும் பொழிகின்றார். ஆண்டவர்மீது நம்பிக்கைக் கொள்வோர் ஆசி பெறுவர். இன்று புத்தாண்டில் இறைவன் தம் அருளால் நம்மையும் நம் குடும்பங்களையும் திரு அவை முழுவதையும் ஆசீரால் நிரப்புகின்றார்

புத்தாண்டின் விடிவெள்ளி மரியா

புத்தாண்டில் இறையாசீரை பெற்று இயேசுவின் பெயரை தொடர்ந்து உச்சரித்துவிட நமக்கு துணையாக இருப்பவர் நம் அன்னை மரியா. உலகிற்கு ஒளி தரும் மாபெரும் சூரியனான இயேசுவை மரியா, இவ்வுலகிற்கு கொண்டு வருகின்றார். இந்த மகத்தான உண்மையை வெளிப்படுத்திட புத்தாண்டின் முதல் நாள் மரியா கடவுளின் தாய் என்ற விழாவை கொண்டாடி மகிழ வருடம் முழுவதும் அன்னையின் அரவணைப்பால் புது மனிதனாய் திரு அவை நமக்கு வழிகாட்டுகின்றது.

இறையாட்சி பணிகளில் புதிய பாதைகள்

2025-ம் ஆண்டில் பாதம் பதிக்கின்ற இவ்வேளையில் நம் முன் நிற்கும் சவால்கள் ஏராளம் மாறிவிட்ட நம் வாழ்விலே நமது புரட்சி பணிகளால் புதிய மனிதராய் மாறிட முன் வருவோம். புதுமை என்பது விவிலிய பண்புகளில் ஒன்று புது வாழ்வு பெற்றவர்களாய் வாழும்படி (உரோமையர் 6:4) திருத்தூதர் பவுல் அழைக்கின்றார். நாம் புதிதாய் பிறக்க வேண்டும் இன்றைய எதார்த்தங்களோடு உரசிப்பார்க்கும் புதுமைகள் பிறக்க வேண்டும். இறையாட்சி பணிகளில் நான் புதிய பாதைகளை வகுக்க வேண்டும் புதிதாய் செயல்பட, பாங்காய் செயல்பட, பக்குவ மாய் செயல்பட, இறையாட்சி பணிகள் இன்று நமக்கு அழைப்பு விடுக்கின்றன. அநீதிக்கு எதிராக நீதியை நிலைநாட்ட அறியாமைக்கு எதிராக அறிவை புகட்ட நம்மையும் நம் ஆற்றலையும் தடை செய்கின்ற எல்லாவற்றையும் உடைத்தெறிந்து தொடர்ந்து ஓட இலக்கை நோக்கி பயணிக்க புதிய பாதைகளை நமக்கு நாமே வகுத்துக்கொள்ள வேண்டும்.

திருவையில் புதிய புரிதல்கள், புதிய பார்வைகள்

திருஅவை ஆளும் திருஅவையாக அல்லாமல், அரவணைக்கும் திருஅவையாக மாற புதிய தெளிவுகள் பெற வேண்டும். அன்பியங்கள் கூட்டியக்க திரு அவையின் அடித்தளங்கள் என்ற புரிதலை வளர்க்க வேண்டும். இன்றைய தலைமை பண்பை நாம் கொண்டிருக்க வேண்டும். பகிர்வின் இறை சமூகத்தை கட்டியெழுப்பவும் தொண்டாற்றும் தலைவர்களாக பாதம் கழுவும் தலைவர்களாக மாறும் புதிய பார்வைகள் நம் குடும்பங்களில் அன்பியங்களின் ஜொலிக்க வேண்டும். எல்லைகளைக் கடந்து பெருந்தன்மையோடு சிந்திக்கும் புதிய தலைவர்களாக நாம் உருவெடுக்க வேண்டும்.

குடும்ப உறவின் முக்கியத்துவம் அன்பு

நமது வாழ்வில் முக்கியத்துவம் பெறுவது உறவுகள் குடும்ப உறவுகளின் இன்றியமையாத தன்மையையும் நமது சுயநல வாழ்வின் நிலையற்ற தன்மையையும் கொரோனா காலங்கள் நமக்கு படம் பிடித்து காண்பித்தன. நாம் கடவுளுக்கும் இயற்கைக்கும் மனிதனுக்கும் நம் ஒவ்வொருவரின் தனிப்பட்ட வாழ்விற்கும் பதில் தரவேண்டும். உறவை கற்றுக்கொடுத்து உறவால் வாழ்வு தரும் தொட்டில் குடும்பம். அன்பின் உறைவிடம் குடும்பம், மனிதனை மனிதனாக உருவாக்குவது அன்பு

புத்தாண்டில் புது மனிதனாய் மாறிட

ஆண்டுதோறும் புத்தாண்டு வந்து செல்கிறது, ஒவ்வொரு ஆண்டின் துவக்கத்திலும் பல உறுதி மொழிகளை நாம் எடுக்கிறோம். புதிய சிந்தனைகளை, புதிய திருப்பங்கள், புதிய தேடல்கள், நம்மில் எழுகின்றது. ஆனால் புது மனிதனாய் மாறிட நமது மனநிலையில் அடிப்படையான மாற்றம் தேவை.

“பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் உறவாக மலர்ந்திட வையத்துள் வாழ்வாங்கு வாழும் நல்லவர்களாய் வாழ்ந்திட”

“யாதும் ஊரே யாவரும் கேளீர்”

என்று தமிழ் பண்பாட்டுனி உள்ளடக்கும் மனதுடன் பாருங்கும் பரமனின் நண்பர்களாய் செயல்பட நாம் புதிய மனிதனாய் மாறிட அழைக்கின்றவு இந்த புதிய ஆண்டு

2025- ஆம் புத்தாண்டில் நாம் புது பொலிவு பெற்றவர்களாக நமது வாழ்க்கையை வரவேற்போம். புதிய எண்ணங்களை, புதிய குறிக்கோள், புதிய முயற்சிகளை ஏற்படுத்து வாழ்க்கையில் வசந்தம் பிறக்க வாழ்வாய் பொங்கிட எதிர்காலம் நம் எண்ணம்போல் அமைய நாம் புதிய மனிதர்களாக உருவெடுக்க வேண்டும். கடந்து வந்த பாதைகளை விட கடக்க இருக்கும் பாதைகளில் நாம் சந்திக்கப் போகும். சவால் நிறைந்த பயணங்கள் நாம் புதிய பார்வைகளை மேற்கொள்ள வாய்ப்பாகட்டும். புதிய வருடத்தில் புதுப்புது திட்டங்களால் புது புது மனிதர்களாக மாறுவோம்.

2 வாரம் புத்தாண்டு சபதம்

திரு. N.K. ரெஞ்சித், லூர்துகிரி

புத்தாண்டு என்றாலே புதுமை. பழையன களைந்து புது விடியலோடு வாழ்வு தொடரவும், வாழ்வியலில் மாற்றங்கள் நிகழவும், மகிழ்ச்சி நிலைக்கவும் நாம் பல முயற்சிகள் எடுக்கின்றோம். ஆனால் நாம் எடுக்கும் முயற்சிகள் அனைத்தும் ஒவ்வோராண்டும் திட்டங்களாக மாறுகின்றதே தவிர சாதனையாகவில்லை.

அது போல புத்தாண்டு, பிறந்தநாள் என்ற சிறப்பு கொண்டாட்டங்களின் போது ஒவ்வொரு மனிதனும் தங்களுடைய எதிர்பார்ப்புகளை, கனவுகளை, இலட்சியங்களை நிறைவேற்றும் வகையில் சிறப்புத் திட்டங்கள் தீட்டுவது இயல்பாகி விட்டது. கிறிஸ்தவர்களாகிய நாம் தனிமனித வாழ்வில், நமது அன்பியங்களில், நாம் பங்கெடுக்கும் இயக்கங்களில், நாம் சார்ந்திருக்கும் சமூகத்தில், நமது பங்கில் எனப் பல இடங்களில் பலரின் கருத்துக்களையும் ஒன்றிணைத்து ஒருமித்து செயல்பட்டு சபதம் எடுக்கிறோம். ஆனால் நிறைவேற்றுவதில் சிரமப்படுகிறோம்.

புத்தாண்டில் வாழத் துவங்கிய நான் இந்தவருடம் யாருடனும் தேவையற்ற காரணங்களுக்காக கடன் வாங்கமாட்டேன், ஆரோக்கியமான உணவுப்பதார்த்தங்களை மட்டுமே உண்பேன், என்னுடைய குடும்பத்திற்காக. எதிர்காலத்திற்காக நல்ல வேலைவாய்ப்பைப் பெற்றுக் கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டு வேலையை பெற்றுக் கொள்வேன். பொருளாதாரத்தை, குடும்ப உறவுகளை. நேரத்தை சேமிப்பேன் என்றெல்லாம் தீர்மானம் எடுப்பது ஒவ்வோராண்டும் வாழ்வின் ஆண்டுத்திட்டமாகி செயல்பாடின்றி மாறிக்கொண்டேப் போகிறது.

காலம் பொன் போன்றது கடமை கண் போன்றது என்பது பழமொழி. இவ்வுலக வாழ்வில் எந்த உயிர்களாலும் தான் கடந்து வந்த பாதையில் திரும்பி பயணிக்க இயலாது. மனிதராகிய நாம் பெற்றுக்கொண்ட இவ்வாழ்க்கையும் அவ்வாறே தான். நாம் பயணிக்கும் ஒவ்வொரு மணித்துளிகளும் மிகவும் பயனுள்ள விதத்தில் அமைக்கப்பழகிக் கொள்ள வேண்டும். எப்போது நாம் நம் வாழ்க்கையை திருப்பிப் பார்த்தாலும் நிறைவான, மகிழ்ச்சியான தருணங்களை நாம் உணர வேண்டுமென்றால் நாம் குறிக்கும் திட்டங்களை திறம்பட செய்து முடிப்பதால் மட்டுமே முடியும்.

மண்ணுக்குள் புதைந்திருக்கும் விதையானது முளைவிட்டு விருட்சமடைய போராடும் சவால்கள் ஏராளம். விதையை மண்ணில் புதைத்தபின் உரமூட்டலாம், நீரூற்றலாம், விதையிலிருந்து முளை வர முயற்சிகள் செய்யலாம். ஆனால் விதை

முளைக்க வேண்டுமென்றால் மனிதன் முயற்சிசெய்தாலும், மண்ணில் புதைக்கப்பட்ட விதையானது தனது சூழ்நிலைக்காரணிகளால், தானாகவே தான் முளைக்கும். அது போல மனிதனின் வாழ்நாளை குறிப்பிட்ட வரையறைக்குள் அமைக்கப்பட்டிருந்தாலும் தானாகத் துணிந்து, சூழ்நிலையறிந்து திறம்பட செய்தாலொழிய எவ்வகைக் கொண்டாட்டங்களாலும் புதுமையை, புதுவாழ்வை அடைய, அனுபவிக்க முடியாது. புத்தாண்டை முன்னிட்டு நான் இப்படித்தான் வாழ வேண்டும் என்று சபதம் எடுத்தேன், அதை இவ்வாண்டு நிறைவேற்றினேன், ஆகையால் நான் எடுத்த சபதத்தில் வெற்றிபெற்றேன் என்றால் அது வீண்சபதமாகிவிடும். ஓராண்டு செயல்பாடுகளோடு விட்டுவிடாமல், வாழ்வின் ஒவ்வொரு நொடிப் பொழுதும் தேவையற்றதைக் களைந்து, தேவையானதை மீண்டும் புதுப்பித்து சேர்த்துக் கொள்ள வேண்டும் என்றால் தான் புதுமையை நாம் உணர்ந்து கொள்ள முடியும். புத்தாண்டு சபதம் இலக்கை அடையும்.

அலைப்பேசி, தொலைக்காட்சி போன்ற ஊடகங்களால் சொற்பமான நேரத்தை வீணடித்துக் கொண்டிருக்கும் நாம், வரமாய் பெற்ற வாழ்க்கையை முழுமையாக ரசித்து, அனுபவித்து வாழ்வோம். அவ்வாறு நாம் வாழ என்னென்ன சபதங்கள் எடுக்கலாம் என்பதை பார்ப்போம்.

தனிமனித வாழ்வில் ஏற்க வேண்டிய புத்தாண்டு சபதம்

1. கடந்த காலங்களாக நான் நிறைவேற்ற இயலாத தீர்மானங்களை இவ்வாண்டில் நிறைவேற்ற முயற்சி செய்வேன்.
2. ஆரோக்கியமான வாழ்வு வாழ சுகாதாரமான, சுற்றுச்சூழலை உருவாக்குவேன்.
3. கடனில்லாமல் வாழ சிக்கனமாக செலவு செய்து சேமிக்கும் பழக்கத்தை உருவாக்குவேன்.
4. பதப்படுத்தப்பட்ட உணவுகளைத் தவிர்த்து இயற்கை உணவுகளை உட்கொள்வேன்.
5. இயற்கை உரங்களைப் பயன்படுத்தி வீடுகளில் காய்கறித் தோட்டங்கள் அமைத்து பயன்படுத்துவேன்.
6. ஊடகதர்மத்தை கடைபிடிப்பேன்.
7. பிறருக்கு உதவி செய்தல், தேவையிலிருப்போருக்கு கைம்மாறு செய்யும் பழக்கத்தை வளர்த்துக்கொள்வேன்.
8. எனக்கு கிடைத்த வாழ்கையை முழுமையாக வாழ்வேன்.

குடும்பங்களில் ஏற்க வேண்டிய புத்தாண்டு சபதம்

1. வீடுகளில் கூடி ஜெபிக்கும் பழக்கத்தை உருவாக்குவோம்.
2. தினம் ஒரு வேளையாவது ஒன்றிணைந்து உணவு உண்ணும் வழக்கத்தை பழக்கப்படுத்துவோம்.
3. குடும்ப உறுப்பினர்களின் சமநிலையை மேம்படுத்த நேரத்தை செலவிடுவோம்.
4. மனக்கசப்பு மற்றும் எதிர்மறை எண்ணங்களை விடுத்து, குடும்ப உறவுகளுடன் அன்பாக இருக்கப் பழகிக் கொள்வோம்.
5. குடும்பத்தாரோடு இணைந்து திருத்தலங்கள் மற்றும் சுற்றுலா தலங்களுக்குச் செல்வோம்.
6. குடும்ப உறுப்பினர்களின் சிறப்புக் கொண்டாட்டங்களில் முழு ஈடுபாட்டோடு பங்கெடுப்போம்.

அன்பியங்களில் ஏற்க வேண்டிய புத்தாண்டு சபதம்

1. நமது அன்பியங்களை சார்ந்த குடும்பங்களைச் சுற்றியுள்ள பகுதிகளை தூய்மையாக வைத்துக் கொள்வோம்.
2. நெகிழிப் பைகளுக்குப் பதிலாக துணிப்பைகளைப் பயன்படுத்துவோம்.
3. அன்பியத்தில் வாழும் குடும்பங்கள் இணைந்து சுற்றுலா செல்லுதல்.
4. குடும்பங்களுக்கிடையே நல்லுறவு கொண்டு வாழ்தல்.
5. பகையில்லா அன்பிய உறவுகளை உருவாக்குதல்.
6. அன்பியக் குடும்பங்கள் இணைந்து இரக்கச் செயல்களை செய்தல்.
7. அன்பிய மாணவர்களின் திறமைகளை வளர்க்கும் வகையில் பாராட்டுகள் மற்றும் பரிசுகள் கொடுத்து ஊக்கமளித்தல்.
8. நோயுற்றோரை, வலுவற்றோரை, சந்தித்து அவர்களுக்கு ஆறுதல் அளித்தல்.

மேற்குறிப்பிட்ட சபதங்களை எவ்வாறு நிறைவேற்ற நம்மை எவ்வாறு தயாரிக்க வேண்டும் என்பதையும் பார்ப்போம்.

1) மாற்றங்களை ஏற்க மனதளவில் தயாராக வேண்டும் :

வாழ்க்கையில் சிறிய அளவில் சாதித்து இருந்தாலும், ஆணவம் கொள்ளாமல் மேலும் சாதிக்க வேண்டும் என்ற எண்ணத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும். அதற்காக நம்மை மாற்றிக்கொள்ளும் முயற்சியில் முழுபங்காற்ற வேண்டும். மேலும் செயல்படுத்த விரும்பும் மாற்றங்களை செய்யும் முன் இவற்றை கவனத்தில் கொள்ளுதல் முக்கியமானதாகும்.

1. எண்ணங்களே செயல்களாகும், ஆகவே நேர்மறையாக எண்ணங்களை வளர்த்துக் கொள்ளுங்கள்.
2. திடீரென்று மாற்றங்களை செய்யாதீர்கள், படிப்படியான மாற்றங்களை உருவாக்குங்கள்.
3. தவறுகளை கண்டறிந்து சரிசெய்யுங்கள்.

2) ஊக்குவிக்கும் இலக்கை அமைத்துக் கொள்ளல் :

தெரிந்து கொண்ட இலக்கு மதிப்புமிக்கதாக உள்ளதா மற்றும் பயனுள்ளதாக உள்ளதா என்பதை உறுதி செய்து கொள்ளுங்கள். இலக்குகளை வரிசைப்படுத்தி அவற்றிற்கு முக்கியத்துவம் கொடுங்கள். இவ்வாறு செய்வது மகிழ்ச்சியை அளிப்பதோடு, இலக்கை அடைவதற்கான உந்துதலையும் தரும்.

3) தீர்மானங்களை அடுத்தவர்களிடம் பகிருங்கள் :

திட்டமிட்ட தீர்மானங்களை தன்னால் நிறைவேற்றாமல் விட்டால் குடும்பமாக, சமூகமாக ஒன்றிணைந்து நிறைவேற்ற போராடலாம். அதற்காக நம் தீர்மானங்களை பிறரோடு பகிர்வதில் ஆர்வம் காட்ட வேண்டும்.

இவ்வாறாக நாம் செய்யும் தீர்மானங்களால், சபதங்களை நிறைவேற்ற முடியும். ஆரோக்கியமான உறவுகள் நல்ல திட்டங்களை செயல்படுத்த வழிவகைச் செய்யும். மேலும் வருடத்திற்கு ஒருமுறைக் சாதி, மதம். இனம் கடந்து கொண்டாடப்படும் இப்புத்தாண்டு மிகச் சிறப்பான சாதனையாக அமையும் என்பதில் ஐயமில்லை.

3 வாரம் — மனிதன் தவறிழைக்கும் முதன்மையான 10 தவறுகள்

அருட்பணி. M. ஆல்வின் விஜய்
இயக்குநர், அன்பிய பணிக்குழு

நமது நேரத்தையும், வேலைகளையும் நம்மைவிடத் திட்டமிடத் தெரிந்தவர் யார் இருக்கிறார் என நினைக்கிறோம் ! இந்த நினைப்பிலேயே, வாழ்வில் அடிப்படையான படிநிலைகளை மறந்து வாழ்வை இழந்துவிடுகிறோம். இதோ… நிர்வாகவியல் நிபுணர்கள் பட்டியல் போடும் அந்த முதன்மையான 10 இரகசிய தகவல்கள். அந்த தவறுகளை சீர்செய்து வாழ்வை வளமாக்க இப்புத்தாண்டில் நமக்கு தரப்பட்டுள்ள வழிமுறைகள்.

1. பட்டியல்

நாளைய தின நாட்காட்டியில் என்னென்ன பணிகள் செய்ய வேண்டும் என்பதை முந்தைய நாள் இரவே திட்டமிடுவது வழக்கம். ஆனால் மறுநாள் காலை திட்டமிட்டவற்றுள் பாதி மறந்துவிடும். ஒருநாள் பட்டியலில் இத்தனை மறதிகள் என்றால் ஓராண்டு, மூவாண்டு என வகைப்படுத்தப்பட்டு திட்டமிடும் பணியிடங்களிலும் மனித வாழ்நாள்களிலும் திட்டமிடப்படும் பட்டியல்கள் அனைத்தும் நிறைவேற்றம் அடையுமா என்றால் ? இல்லை என்பதே பதிலாகிவிடும். இதை நிவர்த்திசெய்ய கையேடுகளில் தகவல்கள் பதிக்கப்பட்டு பராமரிப்பது நன்று. மாற்றாக நாகரீக முறையில் அலைபேசி, மின்தொடர்பு சாதனங்கள் போன்றவற்றை ஆயுதமாகப் பயன்படுத்திப பட்டியல்களைத் தரவாக்கி சேமிக்கலாம். இதன் மூலம் முக்கியமானப் பட்டியல்கள் எவையெல்லாம் என்பதை தரவரிசைப்படுத்தி நிறைவேற்றலாம்.

2. இலக்கு

ஆறு மாதங்கள் கழிந்து நீங்கள் அடைய வேண்டிய உயரம் எது: அடுத்த ஆண்டு நீங்கள் என்னவாக இருக்க விரும்புகிறீர்கள் ? இன்னும் 10 ஆண்டுகள் கழித்து உறவுகளும் நட்பும் சமூகமும் உங்களை எப்படி அடையாளம் காண வேண்டும் என நினைக்கிறீர்கள். இப்படி இதுவரை நினைத்ததில்லையா ? இன்றே அதைத் திட்டமிட்டுக் கொள்ளுங்கள்..

ஏனெனில், இலக்குதான் நேர நிர்வாகத்தைத் தீர்மானிக்கிறது. இலக்கில்லாமல் செய்யப்படும் எச்செயலும் முழுமையடையாது. கடிகாரமுட்கள் நகர்ந்து கொண்டே தான் இருக்கும், இயற்கையின் காலச் சூழ்நிலைகளும் மாறிக் கொண்டே தான் இருக்கும். சூழ்நிலைகளுக்குத் தகுந்தவாறு இலக்கை அமைத்துக்கொண்டு செயல்பட்டால் தான் வாழ்வில் வெற்றியடைய முடியும். இவ்வாறாக வாழ்க்கைப் பயணத்தில் இலக்கை முடிவு செய்தால் உங்களிடம் என்னென்ன இருக்கிறது. அதையெல்லாம் எப்படிப் பயன்படுத்துவது, எந்த நேரத்தை எதற்குச் செலவிடுவது எனத் திட்டமிட்டுக் கொள்ளலாம்.

3. எது முக்கியம்

ஒரு வேலையை நிறைவேற்றிக் கொண்டிருக்கும் போதே, அவ்வேலையை விட்டு மறு வேலையை சேய்ய வேண்டும் என்று தாவிக் கொண்டிருந்தால் நேரம் தான் வீணாகிவிடும். எந்த வேலையையும் முழுமையாக செய்ய முடியாத சூழ்நிலை உருவாகி செய்யும் வேலைகளில் குழப்பமும், தாமதமும் ஏற்படும் நிலை வரும்.

இதற்கு மாற்றாக எவ்விதமான வேலைகள் வந்தாலும் எது முக்கியம் என்பதை தரவரிசைப்படுத்தி, தெளிவுபடுத்தி செய்தோமானால் வேலையை எளிதாக முடித்து விடலாம். எந்த வேலை மிக முக்கியமானதாக முன்னுரிமை அளிக்க வேண்டும் என்பதையும் பகுத்தறிந்து செயல்படலாம். இதனால் வரும் பிரச்சினைகளை எளிதாக எதிர்கொள்ளலாம்.

4. கவனச் சிதறல்

தேவையற்ற அலைபேசி அழைப்புகள், விவாதங்கள் தினமும் 2 மணி நேரத்தை வீணடிப்பதாக ஆய்வுகள் தெளிவுப்படுத்துகிறது. தேவையற்ற அழைப்புகளை மனம் நோகாமல் விரைவில் முடிக்கக் கற்றுக் கொள்ளுங்கள். வீண் விவாதங்களின் போது அதில் நீங்கள் ஆர்வம் காட்டவில்லை என்பதை வார்த்தைகளால் உணர்த்துங்கள். விரிவான கேள்விகளுக்கு, குறுகிய வார்த்தைகளால் பதிலளியுங்கள். உங்களுடைய வேலைகளில் 100 சதவீத ஈடுபாட்டோடு மனச்சிறதல்களுக்கும், இடையூறுகளுக்கும் இடம் கொடாமல் முழு ஈடுபாட்டோடு செய்து முடிக்கப் பழகிக் கொள்ளுங்கள்.

5. தள்ளிப் போடுதல்

தள்ளிப் போடுதல் சோம்பலை உருவாக்கும். இத்தனைப் பெரிய வேலையை ஆரம்பித்து முடிக்க வேண்டுமா ? என்ற சோம்பல் மலைப் போன்ற மிகபெரிய வேலையை நிறைவேற்ற விடாமல் தள்ளிப் போட செய்கிறது. இதுவே, தன்னால் செய்ய இயலுமா ? என்ற பயம் தருவதால் குறித்த நேரத்திற்குள் வேலையை முடிக்க விடாமல் செய்து விடுகிறது. இவ்வாறு தள்ளிப்போடும் பழக்கம் உடையவராக நீங்கள் இருந்தால் உங்களை மாற்றிக்கொள்ள இந்த எளிய வழிமுறையைப் பின்பற்றுங்கள்.

எத்தனைப் பெரிய வேலையாக இருந்தாலும், இன்னும் பத்து நிமிடங்களில் ஆரம்பிக்கப் போகிறேன்.

என மனதிற்குள் தீர்மானித்துக் கொள்ளுங்கள். ஆரம்பிப்பதைப் பற்றி மட்டும் எண்ணுங்கள், முடிப்பதைப் பற்றி கவலைப்படாதீர்கள். வேலையைப் பிரித்துப் செய்து முடிப்பதை இலக்காக்கிக் கொள்ளுங்கள்.

6. சுமை

இந்த வேலையை நம்மை விட வேறு எவராலும் செய்து விடமுடியாது என்ற மேலோங்கிய எண்ணம், எவ்வித வேலைகளையும் பகிர்ந்தளித்து செய்ய இயலாத மனநிலையை உருவாக்கும். இதனால் அனைத்து வேலைகளையும் தனது முதகில் ஏற்றிக் கொள்கிறார்கள். இதன் விளைவு வேலைப்பளு, மனஅழுத்தத்திற்கான முக்கிய காரணமாக விளங்குகிறது. எல்லா வேலைகளையும் அவசரமாக, முழுதிருப்தியின்றி கடைசி நேரத்தில் முடிக்கும் தருணம் உருவாகும். நேரம் தேவையற்று வீணடிக்கப்படுகிறது. ஆகவே வேலைகளைப் புன்சிரிப்போடு பிறருக்குப் பகிர்ந்தளித்து கொள்ளுங்கள். நேரமிருந்தால் பிறர் வேலைகளையும் பகிர்ந்து செய்து கொடுங்கள். அனைவருக்கும் நேரம் மிச்சமாகும், பணிச்சுமை குறையும்.

7. ஓய்வற்ற நிலை

சிலர் தாங்கள் எப்பொழுதும் பரபரப்பாக இருப்பதை விரும்புவார்கள். தங்கள் வேலைகளை கடைசி நேரத்தில் முடிக்கவே விரும்புவர்கள். எங்கேயும் நேரத்தை வீணடிக்கவில்லை என் திருப்தி இவர்களுக்கு இருக்கும். ஆனால் இந்த பரபரப்பால் மன அழுத்தம் அதிகமாகி, உடல் நலம் சீர்கெடுவதைத் தவிர வேறு எதுவும் விளையப் போவதில்லை. நிதானம், ஓய்வு மிக முக்கியம்,

8. பல வேலைகள்

சிந்தையில் ஒன்று, சிரத்தில் ஒன்று என ஒரே நேரத்தில் பல வேலைகளை செய்து முடிக்கும் திறன் பெண்களுக்கு உண்டு. இவ்வாறு ஒரே நேரத்தில் பல வேலைகளைச் செய்வதால் நேரம் மிச்சமாகும் எனப் பலர் நினைக்கிறார்கள். உண்மை அது இல்லை. எந்த வேலையையும் சரியாக முடிக்க முடியாமால் கூடுதல் நேரம் எடுத்து அதைச் செய்ய வேண்டியிருக்கும். எந்த வேலையிலும் கவனம் பதியாமல் சிதறுற்றிருக்கும். செய்து முழக்கப்பட்ட வேலையைக் கூட மீண்டும் செய்ய வேண்டிய நிலை ஏற்படும். ஆனால் அதேநேரம் ஒரு வேலையைச் செய்தால் தான் மனதின் முழுக்கவனமும், முழுஈடுபாடும் செலுத்தி வேலையை விரைவில் முழக்க முடியும்.

9. இடைவேளை

இன்று இரவுக்குள் முடித்தாக வேண்டும் என காலையில் ஆரம்பித்து இரவு வரை இடைவேளையே இல்லாமல் சிலர் வேவைபார்ப்பார்கள். அது தவறு, மூளை சோர்வடைந்து, சேலை செய்யும் திறன் குறைந்து விடும். இரண்டு மணி நேரம் தொடர்ச்சியாக வேலை பார்த்தால் குறைந்தது ஐந்து நிமிடமாவது ஓய்வெடுங்கள். அறைக்குள் நிதானமாக நடப்பது, கண்களை மூடி தியானம் செய்வது. தண்ணீர் அருந்துவது என உடலையும். சிந்தனையையும் சீர்செய்யுங்கள். அந்நேரத்தில் வேலையைப் பற்றி சிந்திக்க வேண்டாம். இந்த ஓய்வு மூளையின் சிந்திக்கும் திறனை அதிகரிக்க வைத்து சுறுசுறுப்பாக்கும். பசிக்கும் போது உணவு அருந்துங்கள். பசியோடு இருக்கும் நேரத்தில் மூளையின் கற்பனைத் திறன் குறைந்து விடும்.

10. எந்த நேரம் ?

எந்த வேலையை எந்த நேரத்தில் செய்து முடிப்பது என்ற கருத்தில் தெளிவாயிருங்கள். குறிப்பாக சிலர் அதிகாலையில் கடினமான வேலையைக் கூட எளிதில் முடிப்பார்கள். மதிய உணவிற்கு பின் வேலையே செய்ய இயலாத நிலையில் சோர்வடைந்து இருப்பார்கள். ஒரு நாளில் எந்த நேரத்தில் உங்களால் வேலையை எளிதாக செய்ய முடியும் என்பதை கண்டுபிடியுங்கள். மிகவும் சிரமமான வேலைகளை அந்த நேரத்தில் எடுத்துக் கொண்டால் விரைவில் செய்து முடிக்கலாம். பிற வேலைகளை மற்ற நேரங்களில் எடுத்துச் செய்தால் எல்லாம் இனிமையாக முடியும்.

4 வாரம் பணிக்குழுவின் திட்டங்கள்

எல்லோரும் ஒன்றாயிருப்பார்களாக !

தினம்	வாரம்	மாதம்
1. குடும்பத்தில் இறைவார்த்தை வாசித்தல், குடும்ப செபம் செய்தல். 2. பகையில்லா வாழ்வு வாழ்தல் 3. கடனில்லா வாழ்வு வாழ முயற்சித்தல் 4. நோயற்ற வாழ்வு வாழ இயற்கையோடு இணைதல்.	1. குழந்தைகளை மறைக்கல்வியில் பங்கேற்க செய்தல் 2. திருப்பலியில் பங்கேற்பு செய்ய வழிகாட்டுதல் 3. பங்கிலிருக்கும் அனைத்து பங்கேற்பு அமைப்புகளிலும் பங்கேற்றல் 4. அன்பிய நிர்வாகிகள் அன்பிய இல்லங்களை சந்தித்தல்	1. தூய்மை மற்றும் சுகாதார பணிகள் 2. மருத்துவ உதவி வழங்குதல் 3. பங்கு ஒருங்கிணைய நிர்வாகிகள் அன்பியங்களைச் சந்தித்தல்
5. குடும்ப இன்ப -துன்ப நிகழ்வுகளில் பங்கேற்றல்	5. விவிலிய போட்டிகள் நடத்துதல் 6. அடித்தளம் வழியாக இறையாட்சியை கட்டியெழுப்புதல் 7. நாளிதழ் செய்தி விமர்சனம் 8. நோயாளிகளை வீடுகளில் சந்தித்தல்	
3 மாதம்	**வருடம்**	**3 வருடம்**
1. மறைமாவட்ட ஒருங்கிணைய நிர்வாகிகள் மறைவட்ட பொதுக்குழுவைச் சந்தித்தல் 2. மறைவட்ட பொதுக்குழு நிர்வாகிகள் மண்டலம் மற்றும் பங்கு ஒருங்கிணையங்களைச் சந்தித்தல். 3. ஊடகங்களின் விளைவுகள் குறித்த விழிப்புணர்வு பாதுகாத்தல் 4. சுற்றுச்சூழல் விழிப்புணர்வு பாதுகாத்தல் 5. கல்வி, வேலைவாய்ப்பில், அரசு உதவி விழிப்புணர்வு 6. கணிணி மற்றும் இணைய பயன்பாடு மற்றும் அவற்றின் தாக்கங்கள் 7. கலைவிழா, கலைப்போட்டிகள் 8. கருத்தாளர் உருவாக்க பயிற்சி அளித்தல் 9. மாணவர்களின் படைப்புத் திறனை உருவாக்குதல்.	1. அன்பிய விழாக்கள் 2. அன்பிய திருப்பயணம் 3. பெயர் கொண்ட புனிதர்கள் திருவிழா 4. அன்பிய சுற்றுலா 5. சிறுதொழில் உதவிகள், திட்டங்கள் குறித்த விழிப்புணர்வு 6. உயர்கல்வி வழிகாட்டுதல் 7. விளையாட்டுப் போட்டிகள் 8. முதியோர் இல்லங்கள் சந்தித்தல், உதவுதல் 9. மருத்துவ முகாம்கள், விழிப்புணர்வு கருத்தரங்குகள் நடத்துதல் 10. சட்ட விழிப்புணர்வு பயிற்சி வழங்குதல் 11. நுகர்வோர் பாதுகாப்பு விழிப்புணர்வு 12. சினிமா, தொலைக்காட்சியின் தாக்கம் குறித்த பட்டிமன்றம், விவாதமேடை நடத்துதல் 13. அரசியல் உரிமை விழிப்புணர்வு 14. அரசியல் பயிற்சி	1. ஏழை மாணவர்களைத் தத்தெடுத்தல் 2. ஏழை திருமணம் 3. குடில் திட்டம் 4. தொடர்பயிற்சிகள் • இசைக்கருவி மீட்டல் • பாடல் • கிராமிய கலைகள்

தேவைக்கேற்ப

1. தெரு மின்வசதி
2. சாலை வசதி
3. குடிநீர் வசதி
4. அரசு உதவி பெறுதல்
5. வேலைவாய்ப்பு மற்றும் நல உதவி செய்து, வாழ வழிகாட்டுதல்
6. அரசியல் ஈடுபாடு

நலத்திட்டங்கள்

முளகுமூடு மறைவட்டம்

பங்கு	அன்பியம் அல்லது ஒருங்கிணையம்	நோக்கம்	எண்ணிக்கை	உதவி தொகை
தக்கலை	புனித எலியாசியார் அன்பியம்	மருத்துவ உதவி	1	2000
பள்ளியாடி	புனித அந்தோணியார் அன்பியம்	நலம் நாடுவோர் திட்டம்	1	1000
	அன்னை தெரசா அன்பியம்	மருத்துவ உதவி	1	1000
	புனித தேவசகாயம் அன்பியம்	முதியோர் உதவி	1	500
	அற்புத குழந்தைஇயேசு அன்பியம்	நலம் நாடுவோர் திட்டம்	1	3000
	கிறிஸ்து அரசர் அன்பியம்	மருத்துவ உதவி	1	1000
	அருளாளர் கார்லோ அன்பியம்	நலம் நாடுவோர் திட்டம்	1	750
செறுகோல்	அன்னைதெரசா அன்பியம்	மருத்துவ உதவி	1	1000
	புனித மிக்கேல்அதிதூதர்அன்பியம்	மருத்துவ உதவி	1	1000
மூலச்சல்	ஒருங்கிணையம்	ஏழைக்கு வீடுகட்ட	1	17200
செம்பருத்தி விளை	ஒருங்கிணையம்	மருத்துவ உதவி	1	19000
விலவூர்	தூய சவேரியார் அன்பியம்	மருத்துவ உதவி	1	1000
	ஒருங்கிணையம்	கோழிக்கோட்டு பொத்தை காப்பகம்	1	1500
சேரிக்கடை	தூய பாத்திமாஅன்னை அன்பியம்	ஏழை திருமண உதவி	1	7000
	புனித அவிலா தெரசா அன்பியம்	ஏழை திருமண உதவி	1	2000
முளகுமூடு	ஒருங்கிணையம்	பெருஞ்சிலம்பு இறைபராமரிப்பு இல்லம்	1	28100
		ராணிசதன் முதியோர் இல்லம்	1	76000
	லாரன்ஸ் அன்பியம்	முதியோர் உதவி	1	1000

பங்கு	அன்பியம் அல்லது ஒருங்கிணையம்	நோக்கம்	எண்ணிக்கை	உதவி தொகை
மாடத்தட்டுவிளை	புனித சவேரியார் அன்பியம்	திருமண உதவி	1	2000
		மருத்துவ உதவி	1	2000
		ஏழைகள் நல உதவி	1	1000
	புனித சூசையப்பர் அன்பியம்	கல்வி உதவி	1	10000
	புனித கார்மல் மாதா அன்பியம்	ஏழைகள் நல உதவி	1	4000
		மருத்துவ உதவி	1	790
	புனித சகாயமாதா அன்பியம்	மருத்துவ உதவி	1	2000
	புனித திருமுழுக்குயோவான் அன்பியம்	குழந்தையின் இருதய அறுவைசிகிட்சை	1	5000
	புனித ஜாண்போஸ்கோ அன்பியம்	ஏழைக்கு வீடுகட்ட	1	20000
		மருத்துவ உதவி	1	1000
	புனித வேளாங்கண்ணிமாதா அன்பியம்	மருத்துவ உதவி	1	500
	புனித தாமஸ்மூர் அன்பியம்	மருத்துவ உதவி	1	1000
	புனித பவுல் அன்பியம்	மருத்துவ உதவி	1	2150
	புனித பேதுரு அன்பியம்	மருத்துவ உதவி	1	1000
	புனித அசிசியார் அன்பியம்	மாற்றுத்திறனாளி	1	1100
	அன்னைவேளாங்கண்ணி மாதா அன்பியம்	ஏழைகள்நலஉதவி	1	1000
	புனித மலையப்பர் அன்பியம்	ஏழைகள் நல உதவி	2	15000
		காப்பகத்திற்கு	1	6000
	புனித சகாய மாதா அன்பியம்	ஏழைகள்நலஉதவி	2	4900
		ஏழை திருமணம்	1	15000
	புனித அன்னை தெரசா அன்பியம்	ஏழைக்கு வீடு விட்ட	1	5000
		மருத்துவ உதவி	1	900
	புனித எலிசா அன்பியம்	மாற்றுத்திறனாளி உதவி	1	1000
	ஒருங்கிணையம்	பாம்பன்விளை நவஜீவன் ஹோம்	1	20000
		இராஜாவூர் டூப்கோட் மனவளர்ச்சி குன்றிய குழந்தைகள் இல்லம்	1	20700

புத்தன்கடை மறைவட்டம்

பங்கு	அன்பியம் அல்லது ஒருங்கிணையம்	நோக்கம்	எண்ணிக்கை	உதவி தொகை
நாகக்கோடு	ஒருங்கிணையம்	மருத்துவ உதவி	3	225000
	புனித அந்தோணியார் அன்பியம்	ஏழைக்குகதவுகொடுத்தல்	1	1600
		கல்வி உதவி	1	2000

மாத்திரவிளை மறைவட்டம்

மாத்திரவிளை மறைவட்ட அன்பிய பணிக்குழு கிறிஸ்து பிறப்பை முன்னிட்டு ஆறு நோயாளிகளுக்கு தலா ரூ. 5000 வீதம் ரூ 30000 கொடுத்து உதவினர்

புதிய நிர்வாகிகள்

முளகுமூடு மறைவட்டம்	புத்தன்கடை மறைவட்டம்
சுவாமியார் மடம் : தலைவர் : திருமதி. ஸ்டெல்லா செயலர் : திருமதி. ஆன்விலின் மேரி து.செயலர் : திருமதி. ஹெலன் மேரி பொருளர் : திரு. சுஜின்	ஆலஞ்சோலை : தலைவர் : திரு. J. மகேஷ் து.தலைவர் : திருமதி. N. அனிதா செயலர் : திருமதி. I. ஜான்சி ராணி து.செயலர் : செல்வி. E. அபினயா பொருளர் : திரு. J. விஜயகுமார் பாக்கியபுரம் : தலைவர் : திரு. சகாய ராஜ் து.தலைவர் : திருமதி. C. ஜெஸ்டின் செயலர் : திருமதி. றஷெர்லின் து.செயலர் : செல்வி. அனீஸ் கிறிஸ்து ஜூலியன் பொருளர் : திருமதி. ஜலஜகுமாரி

குழித்துறை மறைமாவட்ட அன்பிய மாநாடு

சிந்தனை : **அன்பியத்தில் இறையாட்சி**

நாள்	:	18.01.2025
நேரம்	:	காலை 09.00 மணி முதல் பிற்பகல் 02.00 மணி வரை
இடம்	:	தூய தேவசகாயம் திருத்தலம், நட்டாலம்
பங்கேற்பாளர்கள்	:	ஒவ்வொரு அன்பியத்தின் நிர்வாகிகள் 5 பேர் வீதம்

கண்டுபிடி

நூல்கள் : பிலமோன் மற்றும் தீத்து

- புனித பவுல் தன் உடன் உழைப்பாளர்
- பிலமோனுக்கு புனித பவுல் கொடுக்கும் வேண்டுகோள்
- பிலமோன் - ஒனேசிம் இவர்களின் உறவு
- ஒனேசிமுவை பவுல் திரும்ப பிலமோனிடம் அனுப்ப காரணம்
- மூப்பர்கள் கொண்டிருக்க வேண்டிய பண்பு
- விருத்த சேதனத்தில் நம்பிக்கை கொண்டோர் எப்படிப்பட்டவர்கள்.
- கிரேத்துமக்கள் தங்கள் வாழ்வை மாற்றி கொள்ள முன்மாதிரியாய் இருந்தது



ஜூபிலியின் மூன்று நோக்கங்கள்

1. இயேசுவைக் கொண்டாடுவது

யூபிலி ஆண்டில் நாம் முதன்மையாகத் தூய ஆவியாரின் வல்லமையால் மனுவுருவான தந்தையின் மகன் இயேசுவைக் கொண்டாடுகிறோம். அவருடைய பிறப்பு, வாழ்வு, பணி, பாடுகள், சாவு மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவற்றை நினைவு கூறுகின்றோம். அவரை இன்னும் தெளிவாக அறியவும், இன்னும் மென்மையாய் அன்பு செய்யவும், இன்னும் நெருக்கமாய் அவரைப் பின்பற்றவும் மன உறுதியுடன் பலன் தரும் முயற்சிகளை மேற்கொள்வோம்.

2. திரு அவையைக் கொண்டாடுவது

இவரே நம் தாயும் ஆசிரியருமாய் இருக்கிறவர். நம் உடனிருப்பாலும், பங்களிப்பாலும் நம் புனித கத்தோலிக்கத் திரு அவைக்கு நம் உறுதியைப் புதுப்பிப்போம்.

3. நம்மையே நாம் கொண்டாடுவது

நம்முடைய தனி வரங்களாலும், கொடைகளாலும், அழைப்புகள் மற்றும் பணிகளாலும், நம் வாழ்க்கை முறைகள் மற்றும் விழுமியங்களாலும் நாம் ஒருவரை ஒருவர் கொண்டாடுகிறோம். கடவுளை நினைவில் கொள்ளவும் அவரோடும், அவரது திரு அவையோடும் நாம் கொண்ட உறவை ஆய்வு செய்யவும், கடவுளோடும், அவர் தம் மக்களோடும் நம் உறவுகளைப் புதுப்பிக்கவும் ஜூபிலி 2025 நம்மை அழைக்கின்றது. ஒன்றிணைந்து நற்செய்திப் பணி செய்து, பங்களித்து, கூட்டொருங்கியக்க ப் பயணம் மேற்கொள்ளும் சூழலில், நாம் இயேசுவையும், திரு அவையையும், நம்மையும் கொண்டாடுவது அமைகிறது.

ஞாயிறு வழிபாடு தயாரிப்போம்

வாரம்	நாள்	முதல் வாசகம்	இரண்டாம் வாசகம்	நற்செய்தி வாசம்
1	05.01.2025	எசா. 60:1-6	எபே. 3:2-3a,5-6	மத். 2:1-12
3	12.01.2025	எசா. 40:1-5,9-11	தீத். 2:11-14,3:4-7	லூக். 3:15-16, 21-22
3	19.01.2025	எசா. 62:1-5	1கொரி. 12:4-11	யோவா. 2:1-12
4	26.01.2025	நெகெ. 8:2-4a,5-6,8-10	1கொரி. 12:12-30	லூக். 1:1-4, 4:14-21

அடித்தள விமர்சனங்கள் வரவேற்கப்படுகின்றன.

தொடர்புக்கு … 9487110298
8870513177

அன்பிய இயக்குநர்
அன்பிய பணிக்குழு, ஆயர் இல்ல வளாகம்
உண்ணாமலைக்கடை – 629 179

அன்பிய பணிக்குழு

குழித்துறை மறைமாவட்டம்

ஜூபிலி ஆண்டு 2025யை முன்னிட்டு

அன்பிய பணிக்குழு நடத்தும்
ஆன்லைன் YouTube
வினாடி வினா போட்டி

வாசிக்கவேண்டிய பகுதிகள்

- திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் எதிர்நோக்கின் பயணிகள்
- இரண்டாம் வத்திக்கான் சங்கம் - திருஅவை, இறைவெளிப்பாடு, திருவழிபாடு, இன்றைய உலகில் திருஅவை
- தேனருவி சமூகத்தொடர்பு பணிக்குழு You Tube வழங்கும் கற்பிக்கும் திருஅவை/இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடு (4 மாதங்கள்) https://www.youtube.com/watch?v=usWGgt13ShQ

குறிப்பு:-

1. ஒரு குடும்பத்திற்கு ஒரு நபர் பங்கேற்கலாம்
2. வினாடி வினா கேள்விகள் 03-01-2025 அன்று You Tube மூலம் கொடுக்கப்படும்.
3. விடைகள் எழுத்து வடிவில் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 11-01-2025
4. வந்து சேர வேண்டிய இடம் : மறைமாவட்ட அன்பிய பணிக்குழு அலுவலகம், உண்ணாமலைக்கடை

பங்கேற்பாளர் விபரம்
அன்பிய பணிக்குழு நடத்தும் ஆன்லைன்
YouTube வினாடி வினா

வ.எண் நாள் : ....

பங்கு : ....

அன்பியம் : ....

பெயர் : ....

அலைபேசி எண் (வாட்ஸ்அப்) : ....

விடைகள் :

1.

2.

3.

(இதை வெள்ளைத்தாளில் விடை எழுதி பங்குத்தந்தை அல்லது ஒருங்கிணைய தலைவர் கையொப்பமுடன் அலுவலகத்தில் ஒப்படைக்கவும்)

Date of Publishing : **19-12-2024**
Puthia Thedal Registered with Register og New Papers of India
Reged No. TNTAM/2010/35944 KKI/92/**2023 - 2025** Poster on 19th & 20th of every month at Mulagumoodu Post Office

நட்டாலம்

புனித தேவசகாயம்

குழித்துறை மறைமாவட்ட

முதன்மைத் திருத்தலப் பெருவிழா

ஒன்றாம் திருவிழா — **08-01-2025 புதன்கிழமை**

மாலை 4.30 மணி:
செபமாலை, புகழ்மாலை
மாலை 5.00 மணி : **திருக்கொடிப்பவனி**
ஆரம்ப இடம் : முள்ளங்கினாவிளை குருசடி சந்திப்பு
மாலை 6.00 மணி:
திருக்கொடியேற்றம், ஆடம்பரக் கூட்டுத் திருப்பலி
தலைமை : பேரருள்பணி **எஸ்.சேவியர் பெனடிக்ட்**
(மறைமாவட்ட முதன்மை அருட்பணியாளர்)

இரண்டாம் திருவிழா — **09-01-2025 வியாழக்கிழமை**

மாலை 4.30 மணி : **செபமாலை, புகழ்மாலை, திருப்பலி**

மூன்றாம் திருவிழா — **10-01-2025 வெள்ளிக்கிழமை**

மாலை 4.30 மணி : **செபமாலை, புகழ்மாலை, திருப்பலி**

நான்காம் திருவிழா — **11-01-2025 சனிக்கிழமை**

காலை 10.30 மணி: **செபமாலை, புகழ்மாலை, திருப்பலி**
மாலை 4.30 மணி : **செபமாலை, புகழ்மாலை, திருப்பலி**

ஐந்தாம் திருவிழா — **12-01-2025 ஞாயிற்றுக்கிழமை**

காலை 10.30 மணி: **செபமாலை, புகழ்மாலை, திருப்பலி**
மாலை 4.30 மணி : **செபமாலை, புகழ்மாலை, திருப்பலி**
இரவு 7.30 மணி : **புனிதரின் திருவுருவப் பவனி**

ஆறாம் திருவிழா — **13-01-2025 திங்கள்கிழமை**

காலை 10.30 மணி: **செபமாலை, புகழ்மாலை, திருப்பலி**
மாலை 4.30 மணி : **செபமாலை, புகழ்மாலை, திருப்பலி**

எல்லா நாட்களும் அனைவரும் கலந்து கொண்டு திருவிழாவைச் சிறப்பிக்க அன்பாய் அழைக்கின்றோம்.

ஏழாம் திருவிழா — **14-01-2025 செவ்வாய்கிழமை**

காலை 7.00 மணி : **செபமாலை, புகழ்மாலை, திருப்பலி**
காலை 9.00 மணி : **புனிதரின் பெருவிழா ஆடம்பரக் கூட்டுத் திருப்பலி**
தலைமை : மேதகு ஆயர் **ஆல்பர்ட் G.A. அனஸ்தாஸ்** அவர்கள்
(குழித்துறை மறைமாவட்டம்)
முற்பகல் 11.30 மணி : **மலையாளத் திருப்பலி**
பிற்பகல் 3.00 மணி : **திருப்பலி**
(சிரியன் மலபார் வழிபாட்டு முறை)
தலைமை : மேதகு ஆயர் **மார் ஜார்ஜ் இராஜேந்திரன்** அவர்கள்
(தக்கலை மறைமாவட்டம்
மாலை 4.30 மணி : **திருப்பலி**
(சீறோ மலங்கரை வழிபாட்டு முறை)
தலைமை : மேதகு ஆயர் **வின்சென்ட் மார் பவுலோஸ்** அவர்கள்
(மார்த்தாண்டம் மறைமாவட்டம்
மாலை 6.00 மணி : **திருக்கொடியிறக்கம்**

விழா நாட்களில் இரவு 8.00 மணிக்கு மறைவட்டங்கள் மகிழ்வுடன் நடத்தும்
"சிறப்புக் கலைநிகழ்ச்சிகள்" நடைபெறும்.

திருவிழா நாட்களில் சிறப்பு வாகன வசதி செய்யப்பட்டுள்ளது.

அனைத்து நாட்களும் திருப்பலியைத் தொடர்ந்து அன்பு விருந்து நடைபெறும்.

14-01-2025 ஞாயிறு புனிதருடைய பெருவிழா அன்று மாலை 6.30 மணிக்குக் குழித்துறை மறைமாவட்டப் பங்குகள் மற்றும் கிளைப்பங்குகள் வழங்கும் மாபெரும்
“இசைகளின் சங்கமம்”
சிறப்பு நிகழ்ச்சி நடைபெறும்.

அனைவரும் இணைந்து வருவீர் ! புனிதரின் அருள் வரங்களை நிறைவாய் பெறுவீர் !! இறை ஆசீர் பெற்றுச் செல்வீர் !!!

அனைவரையும் இனிதாய் அழைக்கும்
திருத்தல நிர்வாகிகள், திருத்தல அருள்சகோதரிகள், திருத்தல அதிபர் அருள்முனைவர்
R. பால் ரிச்சர்டு ஜோசப் புனித தேவசகாயம் மறைமாவட்ட முதன்மைத் திருத்தலம், நட்டாலம்

Edited & Published by **Rev. Fr. R. Paul Richard Joseph** on behalf of Diocese of Kuzhithurai
Bishop's House, Unnamalaikadai, Marthandam, Post Box No. 1, Pin - 629 179.
Printed at Delta Offset Printers, Vellicode